செ.வெ.எண்: 54 நாள்: 25.04.2020

**கரூர் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.1000 நிவாரண உதவித்தொகை வழங்கப்படவுள்ளது - தகுதியுடையோர் உரிய ஆவணங்களை உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

அனைவரையும் அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் பணி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழகத்தில் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், கொரோனா தொற்று தடுப்பு பணியில் தங்கள் இன்னுயிரையும் துச்சமென மதித்து களத்தில் அயராது பணியாற்றி வரும் தூய்மைப்பணியாளர்களுக்கு ரூ.1000 நிவாரண உதவித்தொகையாக வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின் (தாட்கோ) கீழ் செயல்பட்டு வரும் தூய்மை பணிபுரிவோர் நல வாரியம் மூலமாக 2008 மற்றும் 2009 ஆண்டுகளில் ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தூய்மை பணியுவோருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தூய்மை பணிபுரிவோர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள நபர்கள் அதற்கான அடையொள அட்டை, வங்கிக்கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை கரூர் மாவட்ட தாட்கோ மேலாளர் அவர்களிடம் வாட்ஸ்அப் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ உடனடியாக வழங்க வேண்டும். தற்போது தூய்மைப்பணியாளர்களாக பணிபுரிவோரும், ஓய்வு பெற்று நபர்களும் மேற்சொன்ன தகவல்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

தகுதியுள்ள நபர்கள் தங்கள் அடையொள அட்டை, வங்கிக்கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை படமெடுத்து **94450-29463, 97912-60214** ஆகிய எண்களில் வாட்ஸ்அப் மூலமாகவோ, dmkurtahdco@yahoo.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தகவல்களை வழங்கலாம். மேற்கண்ட அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களை தெரிவிக்கலாம்

இவ்வாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.